**செய்தி வெளியீடு எண்: 010** **நாள்: 04.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.1.2019) சென்னையில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தினரால் நடத்தப்படும் 42வது சென்னை புத்தகக் காட்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் 42வது சென்னை புத்தகக் காட்சியை தொடங்கி வைத்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

படைப்பாளர்களும், படிப்பாளர்களும் சூழ்ந்திருக்கின்ற அறிவுசார்ந்த இந்த இனிய விழாவில்
தலைமையேற்றுள்ள
**பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டி அவர்களே!**
சிறப்பு விருந்தினர்
முன்னாள் கல்வி அமைச்சர்
**மரியாதைக்குரிய முனைவர் வைகைச் செல்வன் அவர்களே!**
வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய
**திரு எஸ்.வயிரவன் அவர்களே!**
விருது பெறும் அறிஞர் பெருமக்களே,
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
பாடநூல் நிறுவனத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான
மரியாதைக்குரிய திருமதி பா.வளர்மதி அவர்களே,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் வாரியத் தலைவர்
சகோதரர் திரு.பாலகங்கா அவர்களே,
மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்
சகோதரர் சுப்புரத்தினம் அவர்களே,
மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த தலைவர் ,
முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் குமரி அனந்தன் அவர்களே,
மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்று நன்றியுரை ஆற்றவிருக்கின்ற
**திரு அரு.வெங்கடாசலம் அவர்களே!**

நிகழ்ச்சியிலே கண்டுகளித்துக் கொண்டிருக்கிற தாய்மார்களே, பெரியோர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களே!
வருகை தந்திருக்கின்ற நண்பர்களே,
அத்தனை பேருக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் 41 ஆண்டுகளாக புத்தகக் கண்காட்சிகளை நடத்தி வெற்றிப் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து இன்று 42வது புத்தகக் காட்சியை நான் தொடங்கி வைப்பது பெருமையாக இருக்கிறது.

ஆண்டுக்கு ஆண்டு புத்தகம் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதால், இப்படிப்பட்ட புத்தகக் கண்காட்சிகளின் தேவையும் அதிகரிக்கத்தான் செய்யும். வாசகர்களை கவர்ந்திருக்கும் வகையில் நவீனங்களையும் வசதிகளையும் அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

- முதல்முறையாக, இந்த புத்தகக் கண்காட்சியில் ஆன்லைன் நுழைவு சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது
- புத்தகக் கண்காட்சி நாட்களில் இரண்டு ATMகளும் நிறுவப்பெற்றுள்ளன.
- பாதுகாப்பு கருதி வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன
- மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள், ரத்த வங்கி ஆகிய சிறப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், வாசகர்களை மகிழ்விக்க தினந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்த அவர்களைக் கொண்டே மேடை நிகழ்ச்சிகளும், பல்வேறு போட்டிகள் நடத்தப்படுவதும் தனி சிறப்பாகும். சிறந்த எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் மற்றும் சிறந்த புத்தக விற்பனையாளர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தல் போன்ற இந்த சங்கத்தின் செயல்பாடுகளைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த புத்தக அரங்கிலே 820 அரங்குகள், 12 லட்சம் தலைப்புகளில் ஒன்றறை கோடி புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு அறிவு சார் மாநிலம் என்பதை பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

புத்தக கண்காட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் அன்னையின் சிலையைக் கண்டு நான் உளமாற மகிழ்ச்சி அடைகிறேன்.

**"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்" என்றார் முன்னாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் அவர்கள்.**

**'ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள், அவனே எனது வழிகாட்டி' என்றார் ரோமானிய மன்னன் ஜூலியஸ் ஸீஸர் அவர்கள்.**

**'புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே' என்றார் ரஷிய நாட்டைச் சார்ந்த லெனின் அவர்கள்.**

கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரடீஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு தனக்கு கொடுக்கும் வரை படித்துக் கொண்டே இருந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு நாள், மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவை சிகிச்சை என்றபோது, தாம்

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால், அதை முடிக்கும் வரை உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை தள்ளி வைக்க கேட்டுக் கொண்டார். அதனால்தான் அறிஞர் அண்ணாதுரையாக இருந்தவர் பேரறிஞர் அண்ணாவாக மாற்றி போற்றப்பட்டார்கள்.

நமது மூதாதையர் அறிவையும், அனுபவத்தையும் ஆவணப்படுத்தி நமக்கு சொத்தாக வழங்கிடுவது நூல்கள்தான். ஆயிரமாயிரம் மலர்களின் மகரந்தச் சேகரமே தேன்கூடாக மாறுகிறது. ஆயிரமாயிரம் கருத்துக்களின் சேகரமே புத்தகங்கள். இவை வெறும் காகிதங்களின் கற்றை அல்ல. அவை உண்மையின் ஊற்றுக்கண். புத்தகத்தை திறப்பவன் அறிவு சுரங்கத்தின் வாயிலை திறக்கிறான்.

இளமையில்தான் மிகச் சிறந்த பண்புகள் பதியம் போடப்படுகின்றன. நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தை இளமையிலேயே ஊட்ட வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்வதிலிருந்து கற்றுக் கொள்வதைவிட, பெற்றோர்கள் செய்வதைப் பார்த்து மிகுதியாகக் கற்றுக் கொள்கிறார்கள். எனவே முதலில் பெற்றோர்கள் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஓராண்டில் சராசரியாக இரண்டாயிரம் பக்கங்கள் படிக்க வேண்டும் என்று பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் பரிந்துரை செய்கிறது.

‘தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றணைத்தூறும் அறிவு’

என்ற குறளுக்கு ஏற்ப தோண்ட, தோண்ட தண்ணீர் மிகுவதைப்போல , படிக்க, படிக்க அறிவு வளரும் என்பதை பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் சொல்லித் தரவேண்டும், ஏனெனில் சிக்கல்களை எதிர்கொள்வதற்கும், சவால்களைச் சந்திப்பதற்கும், புத்தக வாசிப்பு பெரும் துணையாகிறது.

படிக்க எடுத்த பிறகு, படித்து முடிக்கும் வரை கீழே வைக்கவிடாமல் நமது ஆர்வத்தை தூண்டச் செய்கிற புத்தகம் எதுவோ, அதுவே சிறந்த புத்தகம். ஒரு முறைக்குப் பலமுறை திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டும் புத்தகம் எதுவோ, அதுவோ சிறந்த புத்தகம்.

தூங்கச் சென்றவன் தூக்கம் வருவதற்காக புத்தகத்தை புரட்டுகிறபோது, எந்தப் புத்தகம் அவனைத் தூங்கவிடாமல் புரட்டிப் போடுகிறதோ, அதுவே சிறந்த புத்தகம். நல்ல நூல்களை படிப்பதற்கு ஆகும் நேரத்தைவிட, அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அதிக நேரம் செலவிடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் நூல்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கக் கூடும். நூல்களை படித்து மேதையானவர்களைவிட, நல்ல மனிதர்களாக மாறியவர்கள் அதிகம் என்பதால் மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் நூல் வாசிப்பது மிக மிக அவசியம் என்பதை உணருங்கள். நீங்கள் படிப்பதன் மூலம், உங்களை அறியாமலேயே மொழியை வாழவைக்கின்றீர்கள். உங்களால் மொழி வளர்ச்சியடைகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தன்னுடைய படங்களிலே படிப்பதைப்போலவே காட்சிகளில் தோன்றுவார். அது நடிப்பல்ல. இளைஞர்கள் புத்தகம் படிக்கும் பழகத்தை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற புரட்சித் தலைவர் அவர்களின் அறிவுரை ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் நல்ல புத்தகங்களை விரும்பிப் படிப்பார்கள். அதனால்தான் அவரால் ஒரு எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் ஒளிர்ந்திட முடிந்தது. பல்வேறு மொழிகளில் புலமைமிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் பேச்சில், தொலை நோக்கு சிந்தனையும், தத்துவங்களும், பொதிந்து கிடக்கிறது என்றால், அவர்கள் அதிகமான நூல்களை படித்து அறிவை செம்மைப்படுத்தி வைத்திருந்தார்கள். அதன் காரணமாகவே தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில்

கொண்டு செல்லக்கூடிய தொலைநோக்குத் திட்டங்களை தீட்டி, சிறப்பாக செயல்படுத்தி, அவரால் வெற்றி காண முடிந்தது.

தமிழ்நாடு அரசினால் தற்போது 4622 நூலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 8 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள் கைவசம் உள்ளன. 8 கோடியே 49 லட்சம் வாசகர்கள் இந்நூலகங்களை பயன்படுத்துகின்றனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2004 ஆம் ஆண்டு கன்னிமரா பொது நூலகத்தில் ஒரு நிரந்தர புத்தக கண்காட்சியை அமைத்தார். அக்கண்காட்சி கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மக்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23 ஆம் தேதி உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

பொதுவாக ஆண்டுதோறும் 10 அல்லது 12 நாட்கள் நடைபெறும் இந்தக் புத்தக காட்சி இந்த ஆண்டு ஜனவரி 4 ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை 17 நாட்கள் நடைபெறுவது புத்தகங்களை விரும்பி படிக்கும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். பொது மக்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி அதிக அளவில் புத்தகங்களை வாங்கி பயன்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அவர்களின் வழியில் வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலும் வளர்க்கப்பட்ட நாங்கள் எப்போதும் படைப்பாளர்கள் பக்கமும், படிப்பாளிகளின் பக்கமும்தான் இருப்போம் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் நலனில் அதிக அக்கறைக் கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின்

அரசு, உங்கள் நியாயமான கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த விழாவில் அறிஞர் பெருமக்களை சிறப்பிக்கும் வண்ணம், அவர்கள் ஆற்றிய பணிக்காக இன்று விருதுகள் வழங்கி சிறப்பித்ததில் நான் பெரிதும் உவகை கொள்கிறேன்.

இந்த 42வது புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் தென்னிந்திய புத்தக விற்பானையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரை மீண்டும் ஒரு முறை பாராட்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**